1982 பிப்ரவரி 18]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய உள்ளடங்கியிருக்கும் கிராமங்களுக்கும் பேருந்துகள் வசதி வேண்டும் என்றுதான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அத்தகைய இடங்களில் 100-லிருந்து 50 வீடுகள் தான் இருக்கின்றன. அதிலே பயணம் வரக்கூடியவர்கள் மிகவும் குறைவாக இருப்பார்கள். ஏற்கெனவே இந்த மினி பஸ்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கட்டணத்தையும் குறைத்தால், அதை நடைமுறைப்படுத்துவதே வெற்றி பெறாமல் போய்விடக்கூடும்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனை பொருள் தொழிற்கூட மையம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 258—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைபொருள் தொழில்கூட மையம் ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. அவசியம் ஏற்பட்டால் ஆராய்ந்து அதற்கான ஒரு முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் விடைகளின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10.00.)

திரு. இரா. தாமரைக்கனி: திருவில்லிபுத்தூர் தொகுதியில் பனைமரங்கள் அதிக அளவில் இருப்பதால் அங்கே பனை கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.என். இராசேந்திரன்: அதற்கானவாய்ப்புக் கூறுகள் இருக்குமானால் அதை ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: வேலையில்லாமல் சும்மா இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே, ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை நீ என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) திருவில்லிபுத்தூரில் ஆரம்பிக்கும் அந்தக் கூடத்தில் என்னென்ன பொருள்கள் தயாரிக்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: ஒன்றுக்கும் உதவாது இருப்பவர்களைப் பார்த்து பனைமரம் போல் வளர்ந்திருக்கிறாயே என்று சொல்வதாகச் சொன்னார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உலகத்தில் இருக்கிற மரங்களிலேயே அதிகபட்ச பலன் கொடுக்கக் கூடிய மரம் பனைமரமே. 35 பலன்களைக் கொடுக்கக்கூடிய ஒரு மரம் உலகத்திலேயே வேறு எந்த மரமும் கிடையாது பனை மரத்தைப் போல். ஆகவேதான் பனைமரத்தை கற்பக விருக்ஷம் என்று சொல்கிறார்கள். மையக்கூடத்தில் தயாரிக்கக்கூடிய பொருள்கள், நுங்கு பதப்படுத்துதல், கற்கண்டு உற்பத்தி செய்தல், தும்பு உற்பத்தி செய்தல், நாற்பொருட்கள் உற்பத்தி செய்தல், ஓலைப்பொருள்கள் உற்பத்தி செய்தல், பிரஷ் உற்பத்தி செய்தல் விளக்குமாறு உற்பத்தி செய்தல், பனைசீனி சர்க்கரை ஆலை நிறுவனம், பின்னர் பாம் கோலா, பாம்டா உற்பத்தி செய்தல். இவற்றைத் தயாரிக்கும் தொழிற் மையக் கூடங்கள் 24 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட தொழிற்மையக் கூடங்கள் ஆரம்பிப்பதாகயிருக்கிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பனையேறுகிற தொழில் இப்போது குறைந்து வருகிறது. எனவே பனையேறுவதைச் சுலபமாக ஆக்குவதற்கு லிப்ட் போன்ற நவீன சாதனங்களை ஏற்படுத்தினால் அதிகமான அளவில் பனையேறி பனை பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்து பயன்பெற முடியும். அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பனையேறுவதை சுலபமாக ஆக்க ஏணிகளைப் பயன்படுத்த அதை அறிமுகம் செய்துகொண்டு வருகிறார்கள். தொழில் மையக்கூடங்கள் மாவட்டந்தோறும் உருவாகிக்கொண்டு வருவதால் உறுப்பினர் அவர்கள் அந்தத் தொழிற்கூடங்களைச் சென்று பார்த்தால் என்னென்ன புதுமையான வகைகளில் பனைமரங்களைப் பயன் படுத்துகிறார்கள் என்பதை அறிய வாய்ப்பிருக்கிறது. மேலும் பனையேறுவதற்கு அதிகம் பேர்கள் முன்னுக்கு வராத காரணத்தால், பனைமரங்கள் 35 அடி, 40 அடி என்று வளர்ந்திருப்பதால் அந்தப் பனைமரங்களை 10 அடியில் வளரக்கூடிய பனைமரங்களாக வளர்ப்போமேயானால் சுலபமாக இருக்கும் என்பதற்காக திருவில்லிபுத்தூரில் இதற்கான ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை ராமசாமி: தமிழகத்தில் மூலனூர் ஒன்றியம் வறட்சியானதொரு ஒன்றியமாகும். அங்கே மிக அதிகப்படியான அளவில் பனைமரங்கள் இருக்கின்றன. அங்கே பனையேறும் தொழில் சிறப்பாக இருப்பதால் பெரியார் மாவட்டத்திலுள்ள மூலனூரில் ஒரு காம்ப்ளக்ஸ் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாவட்டத்திற்கு ஒரு தொழிற்கூட மையம் என்று பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் முடிவெடுத்திருப்பதால் பெரியார் மாவட்டத்தில் எந்தயிடத்தில் அந்தக் கூடத்தை அமைப்பது என்பதுபற்றி ஆய்த்து முடிவு எடுக்கும்.

1982 பிப்ரவரி 18]

திரு. டி. மணி: இந்த பனைபொருள் தொழில் மையம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். இதிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்தில் அந்த மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்னென்ன பணிகள் அங்கே நடைபெற்று வருகின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்குப் பதிலாக நெல்லை மாவட்டத்திற்கும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நடுமையாக உள்ள காவல்கிணறு என்றஇடத்தில் இந்தத் தொழில்மையக்கூடத்தினை ஆரம்பிப்போமானால் ஆறு மாத பலன் நெல்லை மாவட்டத்திற்கும் ஆறு மாத கால பலன் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் என்று இணைக்கக்கூடிய வகையில் அந்த மையத்தில் 12 மாதங்களுக்கும் தொழில் இருக்கக்கூடிய அளவில் அது செயல்பட்டு வரும். அந்தத் தொழிற்கூடத்தில் என்னென்ன தயாரிப்புகள் செய்கிறார்கள் என்பதை ஏற்கனவே நான் அறிவித்திருக்கிறேன். அந்தத் தொழில் மையக்கூடத்திலே நுங்கு பதப்படுத்தப்படும். கற்கண்டு உற்பத்தி செய்யப்படும். புது உற்பத்தி செய்யப்படும் நாற்பொருள் உற்பத்தி செய்யப்படும், ஓலை உற்பத்தி செய்யப்படும். பிரஷ் செய்யப்படும். பனங் கிழங்குகளைப் பயன்படுத்தி, அதை ரவை மாவாக மாற்றி, உணவுப் பண்டங்களுக்கு பயன்படுத்துவதற்கும் மற்றவற்றிற்கு பயன்படுத்துவதற்கும் இந்த கிழங்கு மாவு உற்பத்தி நிலையம் இருக்கும். இந்த கிழங்கு மாவை அரைத்து உப்பு மாவும், மற்றப் பொருள்களும் தயாரிக்கப்படும். இதைத் தவிர, பனஞ் சீனி, சர்க்கரை உற்பத்தி செய்யப்படும். பாம் கோலா, பாம்டா போன்ற கலர் பானமும் இந்தத் தொழிற் கூடத்திலே தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலசேவிகாக்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்.

*வினா எண் 259—திரு. ஆர். மணிமாறன் : திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பாலசேவிகாக்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சமூகநலத் துறையிலுள்ள 4444 குழந்தைகள் நல அமைப்பாளர்களில் 79 பேர் முழு நேர அரசு ஊழியர்கள் ஆவர். மீதமுள்ள 4365 பேர்கள் பணி அமைப்பு விதிகளுக்கு உட்படாத பகுதிநேர அரசு ஊழியர்கள். இவர்களையும் முழுநேர ஊழியர்களாக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.